## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.

## அசல் வழக்கு எண்.94/2016

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சியின் **பி.வா.சா.1**–ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திருமதி. S. சுசீலா, பி.ஏ., பி.எல்.,மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம், என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.கவிதா | வட்டம் | : | |
| த/பெ. | : | | மாவட்டம் | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |

**பி.வா.சா.1 : முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கின் பிரதிவாதி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். 12.02.1969ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் தாசில்தார் No.1 கோபிசெட்டிபாளையம் S.R.26/69 MIA. Act/Gobi Taluk படி பிறப்பித்த உத்தரவு சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1** ஆகவும், 02.11.1974ம் தேதியிட்ட தாவா சொத்தான புல எண்.118/2 யை பிரதிவாதிகள் தகப்பனார் விவசாயம் செய்து வந்ததற்கான அத்தாட்சியான சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியம் வழங்கிய இரசாயண உர விநியோக சீட்டு அசல் **பி.வா.சா.ஆ–2** ஆகவும், 30.05.1984, 25.04.1990, 26.06.1992, 13.06.2000, 01.02.2002, 24.11.2008ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி மற்றும் 2 முதல் 9 வரையுள்ள பிரதிவாதிகள் பெயரில் உள்ள கந்தாய இரசீது எண்ணிக்கை 9 அசல் **பி.வா.சா.ஆ.3** ஆகவும், 08.07.2002ம் தேதியிட்ட 2 முதல் 9 வரையுள்ள பிரதிவாதிகள் பெயரில் உள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.4** ஆகவும், 02.03.2007ம் தேதியிட்ட புல எண்.118/2 சிட்டா

சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா தள்ளுபடி ஆக வேண்டுகிறேன்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வழக்கானது குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.03.17 09:59:02 +0530

District Munsif